REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 5உ புதன் (21—9—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 6உ வியாழன் (22—9—55) [இதழ் 85

ஐ. நா.-வில் செஞ்சீனா இடம் பெற மீண்டும் ரஷ்யா முயற்சி

நியூயார்க், செப். 20—

ஐ. நா. பொதுச் சபையின் பத்தாவது கூட்டம் இன்று துவங்கியதும், ஐ. நா.-வில் தேசிய சீனாவிற்குப் பதிலாக செஞ்சீனாவிற்கு இடமளிப்பது குறித்த தீர்மானம் ஒன்றை சோவியத் வெளிநாட்டு மந்திரி மாலடோவ் கொண்டுவந்தார்; உடனே அமெரிக்கப் பிரதிநிதியான ஹென்றி காபர்ட் லாட்ஜ் இதனை ஆட்சேபித்திருக்கிறார்.

மக்கள்சபை உறுப்பினர்கட்கு மாவ்லங்கர் சூடு

'மக்கள் சபை கூட்டத்திற்கு திட்டமிடத் தெரியாத நாம்...'

'ஐந்தாண்டுத் திட்டம் எப்படித் தயாரிப்போம்?'

சபையில் கோரம் இல்லாதது பற்றி மாவ்லங்கர்

புதுடில்லி, செப். 20—

நேற்று மாலை மக்கள் சபையில் 'கோரம்' இல்லாது போனதால், உறுப்பினர்களை இன்று சபைத் தலைவர் மாவ்லங்கர் கண்டித்திருக்கிறார்.

கோரம் இல்லாததினால், நேற்று மாலை சபைக் கூட்டம் குறிப்பிட்ட நேரத்திற்கு 20 நிமிடங்கள் முன்பாகவே ஒத்தி வைக்கப்பட வேண்டிவந்தது.

'உறுப்பினர்கள், அக்டோபர் முதல் தேதிக்குப் பிறகு சபை நடத்த விரும்பவில்லை; 5 மணிக்கு மேல் சபை நடத்துவதையும் அவர்கள் விரும்பவில்லை; விவாதத்திற்கென ஒதுக்கப்படும் கால அளவைக் குறைத்துக்கொள்ளவும் அவர்கள் விரும்பவில்லை; இத்தனைக்குப் பிறகும், அவர்கள், சபையில் கோரம் நிலவச் செய்யவும் விரும்பவில்லை,"

என்று மாவ்லங்கர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

"தினந்தோறும் சபைக் கூட்ட நேரத்தை அதிகரிப்பதற்கு மாறாக கூட்டத்தையே மேலும் மூன்று—நான்கு நாட்களுக்கு அதிகக்கரிலாம்,'

என்று தோழர் காமத் யோசனை கூறினார்.

சபைத் தலைவர் அவருக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:

"மக்கள் சபைக் கூட்டத்தை நடத்துவதற்கே நம்மிடம் திட்டம் இல்லையானால், நாம் எப்படி, ஐந்தாண்டுகளுக்கான திட்டங்களை வகுக்கப் போகிறோம்—என்ற சந்தேகம் எழக்கூடும்."

கிராம அதிகாரிகளின் பிரச்சினை என்ன?

மந்திரிகள் குழு ஆராயும்

சென்னை, செப். 20—

கிராம அதிகாரிகளின் நிலைமையை விசாரணை செய்து, அவர்களுக்குச் சம்பள உயர்வு, விடுமுறை வசதி, அந்தஸ்து ஆகியவற்றை அதிகப்படுத்தவது குறித்து அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்ய மூன்று அமைச்சர்களைக்கொண்ட உப-குழு ஒன்றை சென்னை சர்க்கார் நியமித்துள்ளது. திரு எஸ். வெங்கடேசுவரன் ஐ. சி. எஸ். அவர்களைக் காரியதரிசியாகக் கொண்ட அக்குழு டிச 31-ந் தேதிக்குள் தனது அறிக்கையை அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கும்.

ஆப்பிரிக்காவில் வெள்ளை இராணுவத்தினரின் வெறியாட்டம்!

நீக்ரோ சிறுவனை சுட்டுக் கொன்றனர்

நைரோபி, செப். 20—

ஆப்பிரிக்கச் சிறுவனொருவனை இரண்டு வெள்ளை இராணுவ அதிகாரிகள் சாலை ஒன்றிலிருந்து புதருக்குள் அழைத்துச்சென்று பகிரங்கமாகச் சுட்டுக் கொன்றிருக்கின்றனர்.

அந்த அதிகாரிகள் இருவர் மீது கொலை வழக்கு ஒன்று தொடரப்பட்டிருக்கிறது.

அந்த அதிகாரிகளுள் ஒருவர், 'மாவ் மாவ்' இயக்கத்தவரைக் கொல்வதில் மிக அக்கரை காட்டி வந்ததாயும், தன் கீழிருந்த இராணுவ வீரர்கள், மாவ் மாவ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் கொல்லப்பட்ட உடல்களைக் கொண்டு வந்தால் ஒரு பவுன் பரிசு தருவதாகவும் அறிவித்திருந்தாராம்.

இந்தத் தகவல்கள் அந்த வெள்ளை அதிகாரிகள்மீது நடைபெறும் வழக்கு விசாரணையின் போது வெளியாகியிருக்கின்றன.

புது வரி விதிப்பு: தேஷ்முக் கருத்து

காங்கிரஸ் செயலாளர் மறுப்பு

"'அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு புதிய வரி விதிப்பு குறித்து மக்கள் சபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் நிதி மந்திரி தேஷ்முக் அறிவித்த கருத்துக்கள்' என்று கூறி, சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தவறானது," என்று, காங்கிரஸ் கட்சிச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

பிரெஞ்சுப் பிரதமருக்கு முழுச் சுதந்திரம்

மொராக்கோவின் புதிய அரசியல் 'சீர்திருத்தத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பிரெஞ்சுப் பிரதமர் எட்கார் பாவ்ரேவுக்கு, பிரெஞ்சு மந்திரி சபை முழுச் சுதந்திரம் அளித்திருக்கிறதாம்.

இந்தியைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்வதில் தகராறே இல்லையாம்!

★

பம்பாய் கவர்னர்:

"இந்தியைப் பொது மொழியாக—தேசிய மொழியாக ஏற்றுக்கொள்வதில் தகராறு எழுந்தது இல்லை—எழுவதற்கே இடமில்லை; ஏனெனில், இந்தி மொழியை, அரசியல் சட்டம் 'தேசிய மொழி'யாக ஏற்றுக் கொண்டிருக்கிறது; எனவே, இந்தியா முழுவதிலும், இந்தி மொழி, அலுவல் மொழியாகக் குறிப்பிட்ட காலத்திற்குள் வந்துவிடும் என்று நான் நம்புகிறேன்;

"இப்போதுள்ள பிரச்சினை எல்லாம், ஆங்கிலம் உள்ள இடத்தில் இந்தியை எவ்வளவு சீக்கிரமாக அமர்த்த முடியும் என்பது தான்,"

என்று, பம்பாய் கவர்னர் ஹரி கிருஷ்ண மேதாப், பம்பாய் ராஷ்டிர பாஷா பிரச்சார சபாவின் பதினேழாவது ஆண்டு பட்டமளிப்பு விழாவின்போது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

சென்னை நீதிபதி:

"நமது அரசியல் சட்டத்தில் இந்தியை தேசிய மொழியாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதுபற்றித் தகராறு எழுப்புவதில் எவ்வித பயனுமில்லை;

'எண்ண ஒற்றுமையையும், உள்ள ஒற்றுமையையும் மொழி ஒற்றுமையின்றி ஏற்படுத்த முடியாது.

"நமது வட்டார மொழிகளில் நமக்கு இருக்கும் ஆர்வம், 'ஒரே ஐக்கியமான அங்கமாக அகில இந்தியா இருக்கவேண்டும்' என்ற நமது நோக்கத்தைப் பின் தள்ளிவிடக் கூடாது,"

என்று, அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பேசிய சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி கே. இராமசாமி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

கிழக்கு ஜெர்மனிக்கு சுதந்திரம்!

மாஸ்கோவில் ஒப்பந்தம்: நிபந்தனைகளின் விவரம்

மாஸ்கோ, செப். 20—

கிழக்கு ஜெர்மனிக்கு சுதந்திரம் வழங்குகிற ஒப்பந்தம் ஒன்றை சோவியத் பிரதமர் புல்கானின், கிழக்கு ஜெர்மன் பிரதமர் ஹெர் ஒட்டோ கிரோட்வொல் ஆகிய இருவரும் மேற்கொண்டிருக்கின்றனர்.

இரு நாட்டு சர்க்கார்களின் உயர்தர தூதுக் குழுவினரும், கடந்த நான்கு நாட்களாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்; அதன் பிறகே, கிரெம்லின் மாளிகையில் இந்த ஒப்பந்தம் நிறைவேறியிருக்கிறது.

மேற்கு ஜெர்மனிக்கு சுதந்திரம் வழங்குவதென மேற்கத்திய வல்லரசுகள் முடிவு செய்ததை ஒட்டி, இந்தப் புதிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

"மேற்கு ஜெர்மனியில், பிரிட்டிஷ், பிரெஞ்சு, அமெரிக்கத் துருப்புகள் இருக்கும் வரை கிழக்கு ஜெர்மனியிலும் ரஷ்யத் துருப்புகள் இருக்கும்; ஆனால், கிழக்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் உள்நாட்டு விவகாரங்களில் ரஷ்யா தலையிடாது," என்று, ஒப்பந்தம் கூறுகிறது.

"ஜெர்மனி மீண்டும் ஒன்று படும்வரை, இந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும்," என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மாஸ்கோ ஒப்பந்தம்...

மேற்கு ஜெர்மன் மந்திரிசபை அங்கீகாரம்

பான், செப். 20—

ரஷ்யாவுடன் அரசியல் உறவு பூணுவது என்று அடினார் மாஸ்கோவில் மேற்கொண்ட ஒப்பந்தத்திற்கு, மேற்கு ஜெர்மன் மந்திரி சபை அங்கீகாரம் தெரிவித்துவிட்டதாம்.

அடினார் தலைமையில் நடைபெற்ற மந்திரிசபையின் சிறப்புக் கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாம்.

பர்மாவுக்கு ரூ. 10-கோடி கடன்

புதுடில்லி, செப். 20—

பர்மா சர்க்காரின் கோரிக்கைக்கு இணங்க, ரூ. 10-கோடி பர்மாவுக்குக் கடன் தருவதற்கு இந்திய சர்க்கார் சம்மதித்திருக்கிறது.

மேலும், ரூ 10-கோடி பெறுமானமுள்ள பொருட்களை இந்தியாவில் கடனாக வாங்கிக்கொள்ள அனுமதி அளிப்பதற்கும் இந்திய சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறதாம்.

மனைவியின் தலையை வெட்டி மகேசனுக்குக் 'காணிக்கை!

வட நாட்டு கிராமத்தில் சம்பவம்

இராஜ்கோட், செப். 19—

தனது 18 வயது மனைவியைக் கொன்று, அவரது தலையைச் சிவபெருமானுக்குக் காணிக்கையாகச் செலுத்தினாராம் ஒரு 20 வயதுக் கணவன்!

ஜாம்நகர் அருகில் உள்ள கிராமத்திலிருக்கும் சிவன் கோவில் ஒன்றில், இரத்தம் சொட்டச் சொட்ட அந்தப் பெண்மணியின் தலை சிவபெருமானுக்குக் காணிக்கையாக வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாம். மலர்க் கொத்தும், இதர பூசைப் பொருள்களும் வெட்டுண்ட தலையருகே கிடந்தனவாம்; பெண்ணின் முண்டம் வீட்டில் கிடந்ததாம்.

மனைவியின் தலையை வெட்டி, கணவன், சிவனுக்குக் காணிக்கை செலுத்தியதாகப் போலீசார் கருத்து தெரிவித்திருக்கின்றனர்; அவர்கள், தலைமறைவாகச் சென்றுவிட்ட கணவனைத் தேடி அலைகின்றனராம்!

100 மணி நேரம் உண்ணாவிரதம்!

காராச்சி, செப். 20—

இங்குள்ள ஐ. நா. தகவல் நிலையத்தின் முனபு, ஒரு அகதித் தொழிலாளர், காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்தவேண்டுமெனக் கோரி, 100 மணி நேர உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

'அழிவுச் சோதனைக்கு உள்ளாக்காதே!'

'மனித வர்க்கத்திற்கே அபாயம் ஏற்படுகிறது'

"அணுகுண்டுகளையோ, அல்லது நீர்வளிக் குண்டுகளையோ பரீட்சார்த்தமாகக்கூட வெடிக்கச் செய்யக் கூடாது; மனித வர்க்கத்தை இந்த விஷப் பரீட்சைக்கு உள்ளாக்கக் கூடாது," என்று, ஐ நா.-வுக்கு இந்தியா தெரிவித்துள்ளதுடன், 'இதனால் மனித வர்க்கத்திற்கே அபாயம் ஏற்படக் கூடும்,' என்றும் குறிப்பிட்டுள்ளதாம்.

விற்பனை வரி விலக்கு

சென்னை, செப். 20—

மாவட்ட பனை வெல்ல உற்பத்தி சங்கங்கள் விற்பனை செய்யும் பனைவெல்லத்துக்கு, விற்பனை வரி விலக்கு அளித்துச் சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 21—9—'55 புதன்

இந்தி பற்றி இருவர்!

இந்தி மொழி பற்றி இருவர்—பெரிய மனிதர்கள்—கடந்த கிழமையில் கருத்தறிவித்திருக்கின்றனர்.

ஒருவர், ஒரு மாநிலத்தின் கவர்னர்—வடநாட்டுக்காரர்.

மற்றவர், ஒரு மாநில உயர் நீதிமன்ற நீதிபதி—தென்னாட்டுக்காரர்.

ஒருவர், வடநாட்டவராயும், மற்றவர் தென்னாட்டவராயும் இருந்தபோதிலும், இருவரும் ஒரே கருத்தை,' வேறு வேறு இடங்களில் தெரிவித்திருக்கின்றனர்—இந்தி மொழி பற்றி—'பெரிய மனிதர்கள்' என்பதால் போலும்!

பம்பாய் மாநில கவர்னரான அரிகிருஷ்ண மெகதாப், பம்பாய் மாநில இந்தி பிரச்சார சபையில் பேசுகையில் இந்தி பற்றிப் பேசியிருக்கிறார்.

சென்னை மாநில உயர்நீதிமன்ற நீதிபதிகளுள் ஒருவரான கே. இராமசாமி (கவுண்டர்), அண்ணாமலை பல்கலைக் கழகத்தில், அந்தப் பல்கலைக் கழகத்தை நிறுவியவர் நினைவு நாள் விழாவில் பேசுகையில் இந்தி பற்றிப் பேசியிருக்கிறார்.

பம்பாய் கவர்னர் பேசிய இடமோ, இந்தி மொழியைப் பரப்புவதற்காகவே உள்ள சபை!

நீதிபதி பேசிய இடமோ, 'வடமொழிக்கு பண்டார்கார் போல — தமிழ் மொழிக்கு அண்ணாமலை இருக்கவேண்டும்' என்று துணை வேந்தரால் வர்ணிக்கப்பட்ட அண்ணாமலை பல்கலைக் கழகத்தில்!

இடம் வேறுவேருக, நேர் எதிரிடையானவையாக இருந்தபோதிலும், அந்த இடங்களில் பேசிய வடநாட்டு கவர்னரும், தென்னாட்டு நீதிபதியும் இந்தி பற்றிப் பேசியிருக்கின்றனர்.

வடநாட்டு கவர்னர், வடநாட்டில் இந்தி மொழி பரப்புவதற்காகவே உள்ள சபையில் பேசியிருக்கிறார்—அதாவது இடமறிந்து பேசியிருக்கிறார்.

ஆனல் தென்னாட்டு நீதிபதியோ?

இருவரும் இந்தி பற்றி என்னதான் பேசினர்?

'இந்தி மொழி, இந்திய அரசியல் சட்டத்தால் இந்தியாவின் பொது மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது; எனவே, அதுபற்றி தகராறு எதுமில்லை; தகராறு எழுவதற்கே இடமும் இல்லை; சிக்கல் எல்லாம், எவ்வளவு சிக்கிரமாக ஆங்கிலம் இப்பொழுது பெற்றிருக்கும் இடங்களில் எல்லாம் இந்தியை இடம்பெறச் செய்வது என்பதுதான் என்று வடநாட்டு கவர்னர் பேசுகிறார்.

'இந்தி—இந்திய அரசியல் சட்டப்படி இந்தியாவின் தேசிய மொழியாகி விட்டது; எனவே, அதுபற்றி தகராறு எழுப்புவதில் பயனில்லை,' என்று பேசுகிறார் தென்னாட்டு நீதிபதி.

இந்திய அரசியல் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதாம், இந்தி தேசிய மொழியாக. எனவே தகராறு கூடாதாம், எப்படி?

இவர்கள் இருவரும், இந்தி மொழிக்கு தென்னாட்டில் ஏற்பட்டிருக்கிற எதிர்ப்பின் அடிப்படையைப் புரிந்துகொள்ளாமல்தான் பேசுகிறார்களா, அல்லது 'புரிந்துகொண்டுதான் பேசுகிறார்களா?

தென்னாட்டில் இந்தி எதிர்க்கப்படுவதற்கான அடிப்படைக் காரணமே, வடநாடு வேறு, தென்னாடு வேறு; வடநாடு, தென்னாட்டை ஏற்கனவே அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஆதிக்கம் கொண்டு அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது.

இந்த அரசியல், பொருளாதார ஆதிக்கத்தைத் தொடர்ந்து நீடித்து நிலைபெறச் செய்வதற்காக, மொழித் துறை ஆதிக்கம் வேண்டி நிற்கின்றனர் வடவர். எனவேதான், இந்தியைப் புகுத்துகின்றனர் தென்னாட்டில். தென்னாடு, வடநாட்டிற்கு அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் அவல நிலையை மாற்ற விடுதலைப் போர்க்கொடி உயர்த்தியிருக்கும் தென்னாட்டவர்—திராவிடர்—எப்படி வடவரின் மொழி ஆதிக்கத்தை ஒழிக்காமலிருக்க முடியும்? எனவேதான், இந்தி மொழி நேர்முகமாகவோ மறைமுகமாகவோ, பொது அலுவல் கல்வித் துறைகளில் இந்தி புகுத்தப்படுவதைக் கண்டிக்கின்றனர் — எதிர்க்கின்றனர் என்பதை நாம் தெளிவாகச் சொல்லி வருகிறோம். தென்னாட்டில் இந்தி எதிர்ப்புக்கான இந்த அடிப்படையைப் புரிந்து கொள்ளாதவர்கள் பற்றி நமக்குக் கவலை இல்லை.

ஆனல், பம்பாய் கவர்னரான மெகதாபும், சென்னை நீதிபதியான இராமசாமி (கவுண்டர்)யும் இந்த அடிப்படையைப் புரிந்து கொள்ளாதவர்களாயிருப்பர் என்று நாம எண்ணவில்லை.

புரிந்து கொண்டவர்கள், புரியாதவர்கள் போல, சிக்கலின் உருவத்தையே திரித்துக் கூறி பூசி மெழுக முற்படுவானேன்?

சிக்கல் இந்தியை, தென்னாட்டவர்—திராவிடர் ஏன் கற்க வேண்டும் என்பது?

இவர்களோ, சிக்கல் இந்தியை, எப்படி—எவ்வளவு சீக்கிரம் புகுத்துவது என்பது தான் என்கின்றனர்.

'இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக் கொண்டுவிட்டது என்பதினல் இந்தியைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்வதில் தகராறு இல்லை; தகராறு எழ இடமில்லை என்கிறார், கவர்னர் மெகதாப்.

சட்டம் மக்களுக்குத்தானே தவிர, சட்டத்திற்காக அல்லவே மக்கள்.

தென்னாட்டு மக்கள், இந்திய அரசியல் சட்டம் கூறும் அரசியல் அமைப்பையே ஏற்றுக் கொள்ள மறுக்கும்போது, அந்தச் சட்டத்தைக் காட்டி, 'அதில் உள்ள விதி இது; ஆகவே, அதன்படி இந்தியை ஏற்றுக்கொள்' என்பது எப்படி நியாயமான வாதமாயிருக்க முடியும்?

எனவே, சிக்கலுக்குப் பரிகாரம் தேட நினைப்போர், சிக்கலை முதலில் புரிந்துகொள்ளட்டும்.

இதில் குறிப்பிடத் தகுந்தது என்னவென்றால், வடநாட்டு கவர்னருக்கு, தன் நாட்டு மொழி அகில இந்தியாவிலும் அரசோச்சும் மொழியாக இருக்கவேண்டும் என்றெண்ணும் மொழிப் பற்று அல்ல—மொழி வெறி கொண்ட உள்ளம்; சென்னை நீதிபதிக்கு தனது தாய் மொழி, தன் மக்கள் வரையிலேனும் ஆட்சி மொழியாக, வேறு எந்த மொழிக்கும் அடிமையாகாத நிலைபெற வேண்டும் என்றெண்ணும் மொழி வெறி அல்ல, மொழிப் பற்றேனும் கொண்ட உள்ளம் இல்லாமற் போய்விட்டது தான்.

பலப் பலர் பேசுவதைப் போலவே, இந்த இருவரும் இந்தி பற்றிப் பேசியிருக்கின்றனர். மாற்றம் எதும் இல்லை. காலம், வெகு விரைவில், இவர்கள் போன்றாரின் போக்கில் மாற்றம் உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

நரம்பு வைத்திய நிபுணர்கள் மாநாடு

43 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்

இம்மாதம் 12—17-ந் தேதிகளில், இலண்டனில் நடைபெற்ற சர்வதேச நரம்பு வைத்திய நிபுணர்கள் மாநாட்டில், இந்தியா உள்ளிட்ட 43 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மூளை சம்பந்தமான வியாதிகள், எஞ்சினுலும், போதையூட்டும் பொருள்களாலும் நரம்புகள் பாதிக்கப்பட்டு ஏற்படும் வியாதிகள், நரம்பு சம்பந்தமான நோய்கள் இவை பற்றிய அறிக்கைகளையும், குறிப்புகளையும் மாநாட்டின் பிரதிநிதிகள் ஆராய்ந்து விவாதித்தனர்.

குற்ற ஆராய்ச்சியாளர் மாநாடு

400 நிபுணர்கள் ஆராய்ச்சி

12—9—55ல், இலண்டனில் சர்வதேச குற்ற ஆராய்ச்சியாளர் மாநாடு ஆரம்பமாயிற்று. இந்தியா உள்ளிட்ட 40 நாடுகளைச் சேர்ந்த 400 நிபுணர்கள், அம்மாநாட்டில் பங்கேற்றனர்.

குற்றத்திற்குத் தூண்டுதல், மீண்டும் மீண்டும் குற்றம் புரியும் அவா, குற்றம் களைதல், குற்றத்திற்குக் காரணமும் விளைவும்—இவைபற்றியும், கொலை, பொய்க் கையெழுத்திடல், நாணய நோட்டுகளை அச்சடித்தல் போன்ற குற்றங்களுக்குக் காரணம், தூண்டுதல் ஆகியவை பற்றியும் சொற்பொழிவுகளும், ஆராய்ச்சியும் மாநாட்டில் நடைபெற்றன.

கோதாவரி, கிருஷ்ணா நதிகள்

வடிகால்கள் பற்றி ஆராய்ச்சி

புதுடில்லி, செப். 19—

கோதாவரி, கிருஷ்ணா ஆகிய நதிகளின் வடிகால்கள் பற்றிய பொது விசாரணையை, மத்திய நீர்—மின்சாரக் குழுவினர் மேற்கொண்டிருக்கின்றனராம்.

இந்த வடிகால்களின் நீர்ப்பாசன அளவு, மின்சார உற்பத்தி ஆற்றல் குறித்துக் கண்டறியவே விசாரணை நடத்தப்படுகிறதாம்.

என்றாலும், இந்த நதிகளில் அணைக்கட்டுக்கள் கட்டுவதற்கான திட்டம் எதும் பரிசீலனையில் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

'அடிமை'ப் பேச்சுக்கு அமைச்சர்கள் எதிர்ப்பு

ஜோகூர் சுல்தான் ஆற்றிய 'சுதந்திர எதிர்ப்பு'ப் பேச்சின் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றி ஆலோசிப்பதற்கு மலேயா மந்திரிசபை விரைவிலேயே கூடுமென்று முதலமைச்சர் தெங்கு அப்துல் ரெஹ்மான் கூறியுள்ளார்.

தம் மனைவியின் 'முடிசூட்டு விழா'வுக்கு முன்னர் சுல்தான் பேசுகையில், சுதந்திரக் கோரிக்கையைக் கண்டித்தும், 'பிரிட்டிஷார் வெளியேறினல், கம்யூனிஸ்டுகள் நாட்டைக் கைப்பற்றிவிடுவர்' என்றும் கூறினர்.

மேலும் அவர், மக்கள், பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும், இல்லாவிட்டால், 10 ஆண்டுகளானாலும், 'அவசர நிலைமை'ப் பிரகடனம் முடிவடையாதென்றும், மலேயாவின் வளர்ச்சிக்கு பிரிட்டிஷார் உதவி செய்திருக்கிறார்கள் என்றும் கூறியிருந்தார்.

இந்தக் கருத்துக்களை ஆட்சேபித்து, மலேயா மந்திரிகள் விழாவில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி நின்றனர்.

ரூ. 3 கோடி செலவில்!

மீன் பிடிக்கும் தொழில் அபிவிருத்திக்குத் திட்டம்

சென்னை, செப் 20—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மீன் பிடிக்கும் தொழிலை அபிவிருத்தி செய்யவும், மீனவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவும், மாநில சர்க்கார் ரூ. 3 கோடி செலவில் திட்டம் வகுத்திருக்கிறது.

தென்னாட்டிலேயே மீன்கள் அதிகமாகக் கிடைக்கக்கூடிய லட்சத் தீவுகளிலும், மாலத் தீவுகளிலும் (அரபிக் கடலில் இருக்கிறது) மீன் பிடிக்கும் தொழிலை முன்னேற்றுவது, அபிவிருத்தித் திட்டத்தில் முக்கியமான அம்சமாக விளங்குகிறது.

மீன் பிடிக்கும் படகுகள் துறைமுகங்களில் தங்க வசதிகள் செய்வதும், படகுகளை இயந்திரமயமாக்குவதும், ஆழ்கடல் மீன் பிடிப்பைத் தீவிரப்படுத்துவதும், மீனவர்களுக்கு மார்க்கெட் வசதிகள் செய்து தருவதும், அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதும் திட்டத்தின் மற்ற அம்சங்களாகும்.

'ஆணும்-பெண்ணும் சரிநிகர் சமானமே!'

'பால் பாகுபாடுகள் மட்டுமின்றி சாதிப் பாகுபாடுகளும் ஒழிய வேண்டும்'

பம்பாய் கவர்னர் கருத்துரை

"கல்வி விஷயத்தில் ஆண்களுக்கும்—பெண்களுக்கும் வேறுபாடு காட்டக்கூடாது;

"வெளி வேலைகளுக்கு ஆணும், வீட்டுக்குப் பெண்ணும்—என்ற கொள்கை, பாகுபாட்டின் அடிப்படையில் அமைந்தது; எனவே, அதனை ஒழிக்க வேண்டும்;

"எப்படியோ, வீட்டு நிர்வாகத்திற்குப் பெண்களே சிறந்தவர்கள்—என்று கருதப்படுகிறது; இந்தக் கொள்கையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை;

"குணத்தில் மனிதனுக்கும் மனிதனுக்கும், பெண்ணுக்கும் பெண்ணுக்குமிடையே வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது;

"ஒவ்வொரு பெண்ணும், ஆணும் தனது குண நலனுக்கும்—விருப்பத்திற்கும் ஒப்ப, ஒரு கல்வி முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்;

"படிப்புக்காகஎடுத்துக்கொள்ளும் பாடங்களைத் தேர்ந்தெடுப்பதில் முழுச் சுதந்திரம் வேண்டும்; இதனல், எல்லாப் பல்கலைக் கழகங்களும், எல்லாப்பாடங்களுக்குமான வசதியுடையதாக இருக்க வேண்டும் என்பதல்ல; பல வகைப்பட்ட பாடங்களிலும் தனித் திறமை பெறுவதற்குரிய வசதிகளை பல பல்கலைக் கழகங்களும் இடத்திற்கு ஒன்றாகப் பெற்றிருக்கவேண்டும்; இந்த ஏற்பாடு சிக்கனமானதாகக்கூட இருக்க முடியும்;

"ஆண்—பெண் என்ற பாகுபாடு மட்டுமின்றி, சமுதாயத்தில் பல பிரிவினரிடையேயும் பாகுபாடு இருக்கின்றன;

"பால், சாதி, வகுப்பு வேறுபாடின்றி, எல்லோருக்கும்—எல்லா நிலைகளிலும் விரிவான, தாராளமான கல்வி வசதி அளிப்பதின் மூலம்தான் சமூகப் பாகுபாடு ஒழிக்கப்பட முடியும்;

"கல்லூரிகளைவிட்டு பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்கள்; தாங்கள் உரிய வேலை செய்வதுமட்டுமின்றி, சமூக சமத்துவத்திற்காக சமூக சேவையிலும் ஈடுபட வேண்டும்"

என்று, பம்பாய் கவர்னர் ஹரி கிருஷ்ண மேதாப், எஸ். என். டி. டி. பெண்கள் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'கடுமையாக உழைக்கும் மக்களா பிற்பட்டவர்கள்'?

'மனப்பண்பு மாறும்வரையில் இந்தியா முன்னேறஇயலாது'

பண்டித பந்த் பேச்சு

உதயப்பூர், செப். 19—

"தீண்டாமையை ஒழிப்பதற்குச் சட்டங்கள் மட்டும் இருந்தால் போதாது; உள்நாட்டில் நிலவும் வேற்றுமைகளை ஒழித்தாலன்றி, தென்னாப்பிரிக்காவில் நிலவும் இன வேற்றுமையைச் சக்தி வாய்ந்த முறையில் எதிர்க்க முடியாது; கடுமையாக உழைக்கும் ஒரு பெரும் பகுதியினர் பிற்பட்டவர்களாக — தீண்டப்படாதவர்களாக நடத்தப்படும் வரையில் இந்தியா ஒருக்காலும் முன்னேறவே முடியாது,"

என்று, இராஜஸ்தானில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் லீக் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில், மத்திய உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் கூறியுள்ளார்.

சோவியத்-பின்லாந்து ஒப்பந்தம்

இராணுவத் தளத்திலிருந்து ரஷ்யா வெளியேறும்

மாஸ்கோ, செப். 19—

பின்லாந்து-ரஷ்யா ஆகிய இரு நாட்டு சர்க்கார்களிடையேயும், அண்மையில் மாஸ்கோவில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின்படி, 'மூன்று மாத காலத்திற்குள்ளாகப் பின்லாந்தில் உள்ள போர்க்கால இராணுவத் தளத்திலிருந்து சோவியத் ரஷ்யா வாபசாகி விடவேண்டும்,' என்று, விதிக்கப்பட்டிருப்பதாயும், ரஷ்யா அதற்குச் சம்மதித்துவிட்டதாயும் தெரிய வருகிறது.

நட்புறவு, கூட்டுறவு, பரஸ்பர உதவி ஆகியவற்றிற்கென 1948-ல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றை மேலும் 20 ஆண்டுகளுக்கு—1975-ம் ஆண்டு வரை நீடித்துக் கொள்ளவும் இரு நாடுகளும் சம்மதித்திருக்கின்றன என்று தெரிகிறது.

முன்னாள் முதல்வர் முசாதீக் எங்கே?

மன்னரை எதிர்த்தார்; 3 ஆண்டு 'சிறைக் கோட்டம்' புகுந்தார்!

'அரேபியன் இரவுக் கதைகள்' நடைபெற்ற நாட்டினர் மறந்துவிட்ட முதுகிழவரின் இன்றைய சிறை வாழ்வு

டாக்டர் முகம்மது முசாதீக், இன்று, உலகம் மறந்துபோன ஒருவராகிவிட்டார்!

ஆனால், 4 ஆண்டுகட்கு முன்பு இதே அரசியல்வாதி, பெரு மூச்சும், கண்ணீரும் விட்டார்; பிரிட்டனையே நடுங்க வைக்கவும் செய்தார்.

1851-ல், சட்டத்தின் மூலம், பெர்சிய எண்ணெய்க் கிணறுகளிலிருந்து பிரிட்டிஷாரை வெளியேற்றியவர் அவரல்லவா?

பெர்சியாவில், பிரதம மந்திரியாக மூன்று தடவை பதவி வகித்தார்;

தன்னுடைய பலத்தில் தனக்கே மிகுந்த நம்பிக்கையிருந்ததினால் தான், அவர் பெர்சிய மன்னர் ஷாவையே எதிர்க்கத் துணிந்தார்.

அவர் இப்போது எங்கே?

சிறைக் கதவுகளுக்குப் பின்னால், அவருடைய வாழ்க்கை சென்று கொண்டிருக்கிறது; மன்னர் ஷா, அவரை அப்படிச் செய்துவிட்டார் பிரிட்டிஷாரும் எண்ணெய்க் கிணறுகளில் மீண்டும் வேலை செய்யத் தொடங்கிவிட்டனர்; ஆனால், 'அரேபியன் இரவுக் கதைகள்' நடந்த இந்த நாட்டில், சட்டம் படித்துத் தேறிய டாக்டர் முசாதீக்கைப் பற்றிப் பேசுவோர் எவரையும் காணோம்!

சிறைக்கோட்டத்தில்........

சிறைச் சங்கு ஒலிப்பதற்குமுன்—ஆங்குள்ள 1500 சிப்பாய்களும் எழுவதற்கு முன்—சூரியோதயத்திற்கு 1 மணி நேரம் முன்னதாகவே டாக்டர் முசாதீக், படுக்கையிலிருந்து எழுந்துவிடுகிறார்.

மன்னரை எதிர்த்துப் புரட்சி செய்த காரணத்துக்காக 1953-ல், இவர் 3 ஆண்டு தனிக் கொட்டடி சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்; அப்போது அவர், 'சிறை வாழ்க்கையில் அதிகாலையில் எழுந்துவிட வேண்டுமே' என்று சஞ்சலமடைந்தார்; ஆனால், இப்போது அவர், அவ்வாழ்க்கையில் பழகிப் போய்விட்டதால் எவ்விதத் துயரமும் கொள்வதில்லை.

75 வயது கடந்த இந்த அரசியல்வாதி, ஒவ்வொரு வாரமும் காவலர்கள் மாற்றப்பட்டு வரும் முதல் நாளன்றே அவர்களுக்கெல்லாம் வணக்கம் தெரிவித்துவிடுகிறார். அதனால் அவர்கள், அவரிடம் மிகவும் நேசப்பான்மையோடிருக்கின்றனர்; காவலாளிகள் அடிக்கடி மாற்றப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாயிருக்கிறது.

சிறைக்கோட்டத்தில் இருந்தவாறே அவர், ஈரான் அரசியலை நுணுக்கமாகக் கவனித்தே வருகிறார்; அவரைச் சந்திக்க வருகிற நண்பர்கள் எவரேனும் சர்க்காரைப் பற்றியும், எண்ணெய் ஒப்பந்தம் குறித்தும் குறிப்பிட்டால் புருவத்தைச் சுளிக்கிறார்.

கீல்வாத சம்மந்தமான நோயுடனிருப்பதால் அதிகமாய் அவர் நடப்பதில்லை; அதனால் நீர்ரோசம் உண்டாக ஆரம்பித்ததால் இப்போது அவருக்கு மின்சார மோட்டார் சைக்கிள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் அவர் தினசரி 1 மணி நேரம் சவாரி செய்து வருகிறார்.

தனிச் சிறைவாசயாயிருந்த போதிலும், அவருடைய குடும்பத்தினர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அவரைச் சந்திக்கின்றனர்.

முசாதீக்கின் சிற்றுண்டியும், சாப்பாடும் அவரது மனைவியாராலேயே தயாரிக்கப்பட்டு, தினசரி சிறைக்கு அனுப்பப்படுகிறது.

முசாதீக் தன்னுடைய குமாரர்களைச் சந்திக்கும்போது, அரசியல் பற்றி எந்தவிதத்திலும் அவர்களிடம் பேசுவதில்லை; அவருடைய பண்ணையைப் பற்றித்தான் பேசுகிறார்.

அவருடைய சொத்துக்களில் சிலவற்றை விற்றுவிட்டார் என்றாலும், தன்னை ஒரு நிலப்பிரபுவாகவே கருதுகிறார்.

ஒரு நாளில் 6 மணி நேரம் தூங்குகிறார்; 6 மணி நேரம் படிக்கிறார்; 1 மணி நேரம் சைக்கிள் சவாரி செய்கிறார்; மற்ற நேரத்தில் சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு எதைப் பற்றியாவது ஆழ்ந்து சிந்தித்தவண்ணமிருக்கிறார்.

அவருடைய 3 ஆண்டு தண்டனை 1956 ஆகஸ்டு 19-ந் தேதியுடன் முடிவடைகிறதென்றாலும், அதைப்பற்றி அவர் சிந்திப்பதே இல்லை!

ரூ. 20 கோடி செலவில்

பரம்பகுளம் அணைக்கட்டு

உடுமலை, செப். 19—

"உற்பத்தியை அதிகரித்து, ஏழ்மையை ஒழிப்பதற்காக அணைகள் கட்டப்படுகின்றன; திரு—கொச்சி மாநில சர்க்காரின் சம்மதம் கிடைத்தவுடன், பரம்பகுளம் துளியூர் அணை ரூ. 20-கோடி செலவில் கட்டப்படும்," என்று, சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம் தளியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கிழப்பாலூர் முற்போக்கு நாடக மன்றம்

18—9—55 இரவு 8 மணிக்கு, தி. மு. கழகக் காரியாலயத்தில், தோழர் வீ. மா முத்து அரசு தலைமையில் நடைபெற்ற மன்ற உறுப்பினர் கூட்டத்தில், சுரண்டலற்ற, சாதிமத பேதமற்ற சமதர்மக் குடியரசாகத் திராவிடத்தை ஆக்க மக்கள் அனைவரும் ஒத்துழைக்கும்படியாக வேண்டிக் கொண்டும், மன்றத்தின் சார்பாக, 'குற்றவாளி' என்னும் நாடகத்தை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது பின்னர், தோழர் சு ஐயக்கண்ணு அவர்களைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

'கூடி வாழ்வோம்; அதே நேரத்தில் கம்யூனிசம் வளரவும் பாடுபடுவோம்'

ரஷ்யக் கம்யூனிஸ்டு செயலாளர் கூறுகிறார்

மாஸ்கோ, செப். 18—

"ஜினீவா நால்வர் மாநாட்டுக்குப் பிறகு, ரஷ்யத் தலைவர்களிடையே காணப்படும் 'புன்சிரிப்பு,' 'அவர்கள், மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோரது 'வழி'யைக் கைவிட்டு விட்டனர் என்பதாகப் பொருள்படும்,' என்று எவரேனும் எண்ணிக்கொண்டிருந்தால், அவர்கள் மிகப் பெரிய தவறு செய்தவர்களாவர்;

"நாம், கூடி வாழ்தல் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்; அதே நேரத்தில் கம்யூனிசத்தை உருவாக்கவும் பாடுபடுவோம்;

"நாம், 'கூடி வாழ்தல்' என்ற கொள்கையை ஏற்றுக் கொள்வதற்குக் காரணம், 'சோஷலிசம்' 'முதலாளித்துவம்' என்ற இரு அரசு முறைகள் இன்று நிலவுவது தான்,"

—என்று சோவியத் கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ், கிரெம்லின் மாளிகையில் கிழக்கு ஜெர்மன் பிரதமருக்குத் தரப்பட்ட வரவேற்பு ஒன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

செய்திச் சுருள்

★

நினைவு நாள் விழா

சென்னை மாணவர் மன்றம், சென்னை தமிழாசிரியர் கழகம், பெத்துநாய்க்கன்பேட்டை தாய்மார் கழகம் ஆகியவற்றின் சார்பில் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார், மறைமலையடிகள், பாரதியார் ஆகியவர்களின் நினைவு நாள், நேற்று மாலை 5 மணிக்கு டாக்டர் குருசுவாமி உயர்நிலைப் பள்ளியில், திரு. பாவி. சு. செல்லையப்பர் தலைமையில் கொண்டாடப்பட்டது. திரு. எஸ். சச்சிதானந்தம் அவர்கள் 'தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வாழ்க்கை காட்டும் வழி' என்னும் பொருள் பற்றியும், திரு. முத்து இராசாக்கண்ணன் 'மறைமலை அடிகளார் மாண்பு' என்பது பற்றியும், திரு. பாலூர் து. கண்ணப்பர் 'மறைமலை அடிகளார் தொண்டுகள்' என்னும் பொருள் குறித்தும், திரு. ந. சஞ்சீவி 'பாரதியார் பாட்டின்பம்' என்னும் பொருள் குறித்தும், திரு. பகீரதன் அவர்கள் 'பாரதியும் மறுமலர்ச்சியும்' என்னும் பொருள் குறித்தும் விரிவுரை ஆற்றினர். திரு. மயிலை. சிவமுத்து அனைவரை வரவேற்றார்.

தலைவர் தமது முடிவுரையில், பாரதியின் சேவைகளைப் புகழ்ந்து, பாரதியைப் பற்றித் தாம் இயற்றிய கவிதை ஒன்றை வாசித்தார். இடையிடையே குழந்தைகளின் சிறு நாடகங்களும், கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இராசீபுரம் நக்கீரர் நாடக மன்றம்

10—9—55ல், மேற்படி மன்றத்தின் முதல் ஆண்டு விழாவும், 'பாண்டியன்' நாடகத் துவக்க விழாவும் நடைபெற்றது. தோழர்கள் பலர் வந்திருந்தனர். அனைவருக்கும் தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

திருத்துறைப்பூண்டியில் மஜீத் மன்றம் துவக்கம்

11—9—55 மாலை 6 மணிக்கு, ஜவுளிக் கடைத் தெரு தெட்சணாமூர்த்தி இல்ல மாடியில், தி. மு. கழகத் தோழர்களும், கழக அனுதாபிகளும் கொண்ட உறுப்பினர் கூட்டம் தோழர் டி. எஸ் கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது, மேற்படி மன்றம் ஒன்று நிறுவுவதென முடிவு செய்யப்பட்டு, தோழர் கோ. பெருமாள் அவர்களைசெயலாளராகக்கொண்ட மன்ற நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. மன்றம் அமைக்கப்படவேண்டியதின் அவசியம் குறித்துத் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர் பின்னர், 25—9—55ல் மன்றத் துவக்க விழாவினை நடத்துவதெனவும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சமதர்ம நாடக கலா மன்ற திறப்பு

இராசபாளையம் - புதுப்பாளையம் சமதர்ம நாடக கலா மன்றம் 16—9—55ல், நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ச. முத்துசாமி தலைமையில் திறவப்பட்டது. 'மனப் போராட்டம்' என்னும் நாடகத்திற்கு ஒத்திகை நடத்தப்பட்டது. மன்ற நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஒரக்காட்டுபேட்டை தி.மு. கழகம்

16—9—55 இரவு-8 மணிக்கு ஒரக்காட்டுப்பேட்டை தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது 23—9—55 ல் திராவிட நாடு பிரிவினைநாள் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. மற்றும் கழக சம்பந்தமான சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தாய்மார் கழக திருக்குறள் வகுப்பு

17—9—55 மாலை, சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை தாய்மார் கழகத்தின் சார்பில் திருக்குறள் வகுப்பு நடைபெற்ற பின்னர், தோழர் மயிலை. சிவமுத்து தலைமையில் நடைபெற்ற தாய்மார் கழகப் பொதுக் கூட்டத்தில், பெரியார் அவர்களின் 76-வது ஆண்டு நிறைவு பற்றி மகிழ்ச்சி தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திண்டுக்கல்லில் துணைப் பொதுச்செயலாளர்

18—9—55 அன்று காலை திராவிட நாட்டுப் பிரிவினை வாரக் கூட்டத்தையொட்டி, தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் திண்டுக்கல் வருகை தந்தார். காலை 9 மணிக்கு இரயிலடியில் நகர கழகச் செயலாளர் தோழர் சுப்பையா, சமதர்மம் எம் சி., என். முத்து, மா தங்கவேலர், தாண்டவன், பால்ராஜ் மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள் துணைப் பொதுச் செயலாளரை வரவேற்றனர்.

கொடியேற்று விழா

காலை 10 மணிக்கு புதூர் முற்போக்கு வாசகசாலைக்கு வருகை தந்ததோடு, அங்கு தி. மு. கழகக் கொடியை ஏற்றிவைத்து தோழர் என். வி நடராசன் சிறிது நேரம் பேசினார். வந்திருந்த அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

படிப்பக அலுவலகத் திறப்பு விழா

காலை 11 மணிக்கு, திண்டுக்கல் அடுத்த பாரபட்டியில், தானமுத்து—நடராசன் படிப்பகக் கட்டிடத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் சமதர்மம் கழகக்கொடியை ஏற்றி வைத்துப் பேசினார்.

பின்னர், துணைப் பொதுச் செயலாளர், படிப்பகத்தைத் துவக்கி வைத்து, படிப்பகத்தின் அவசியத்தையும், தோழர்கள் நடராசன்-தானமுத்து ஆகிய வீரர்கள் தமிழ் மொழிக்குச் செய்துள்ள சேவையையும் விவரித்துச் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் மா. தங்கவேலர், என். முத்து ஆகியோரும் சிறிது நேரம் பேசினர்.

நாட்டுப் பிரிவினை வார நிகழ்ச்சி

அன்று மாலை 6-30 மணிக்கு, நகர தி. மு. கழகச் சார்பில், வ. உ. சி. திடலில் தோழர் சுப்பையா தலைமையில் பிரிவினை வார விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் சமதர்மம் எம். சி, அவர்கள் நாட்டுப் பிரிவினை வார முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு துணைப் பொதுச் செயலாளரை வரவேற்றார்.

பின்னர், தோழர் என். வி. நடராசன் அவர்கள் நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தியும், ஆறு ஆண்டுகாலமாகத் தி. மு. கழகம் ஆற்றிய பணியினையும் விவரித்து நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

இரவு 10 மணிக்குமேல் உள்ளூர் கழகத் தோழர்களுடன், துணைப் பொதுச்செயலாளர் கழக சம்பந்தமாகக் கலந்து பேசினார்.

திருமணங்கள்

★

14—9—55 காலை 9 மணிக்கு, உடையார்கோவில் கவரைத் தெருவில் தோழர் ஏ. எம். பெருமாள் தலைமையில் தோழர் பொன்னுசாமி—தோழியர் சரோஜா திருந்திய திருமணம் நடைபெற்றது. 'திருந்திய திருமணம்' என்பது பற்றி தோழர்கள் ஏ.வி.பாண்டியன், அறிவுடைநம்பி ஆகியோர் பேசினர்.

• • •

குடந்தை வட்டத்தைச் சேர்ந்த கடுவெளிக்கரைப் பிள்ளையாம்பேட்டையில் தோழர் கு. கண்ணன் தலைமையில் நடைபெற்ற தோழர் சம்பந்தம்—தோழியர் பிச்சையம்மாள் திருமணத்தின் நினைவாக மேற்படியூர் தி. மு. கழகக் கிளைக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது.

• • •

18—9—55ல், சென்னை தங்கசாலைத் தெரு கோவிந்த பவனத்தில் தோழர் சுப்பிரமணியம்—தோழியர் சந்திரமோகனா சீர்திருத்தத் திருமணம் தோழர் புலவர் மயிலை-சிவமுத்து தலைமையில் நடைபெற்றது. உடன் தோழர் ஆர். அங்கமுத்து தலைமையில் தோழர்கள் வல்லை-பாலசுப்பிரமணியம், வ.பா.தாமரைக்கண்ணியம்மையார், நாராயணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பிறப்பு

11—9—55ல், வினாப்பாக்கம் (வ. ஆ. மாவட்டம்) தி. மு. கழகத் தோழர் தி. கு. நாகநாதன் அவர்களின் துணைவியார் தோழியர் அமிர்தம்மாள் ஒரு பெண் மகவுக்கு தாயானார். தாயும்-சேயும் நலம். குழந்தைக்கு 'தேன்மொழி' என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி—பொறுப்பாளர்.

• • •

16—9—55ல், கீழப்பூங்குடி தி. மு. கழகத் தோழர் இராமு-செங்குட்டுவன் துணைவியார் தோழியர் காந்திமதி ஒரு பெண்மகவுக்குத் தாயானார். தாயும் சேயும் நலம்.

பெயர் சூட்டல்

ஆவணித் திங்கள் 27-ம் நாள் சங்கரன்கோவில் தி. மு கழகத் தோழர் பி. பழனி அவர்களது ஆண் மகவிற்கு, காங்கிரஸ் அன்பர் தோழர் மு. பரமசிவனார் முன்னிலையில் 'கலையாபதி' எனப் பெயரிடப்பட்டது தோழர்கள் பி.கணபதி,இளங்கோ,தகிருட்டிணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 தரப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

மறைவு

15-9-55ல், சென்னை கொடுங்கையூர் வட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இராகவன், செயற்குழு உறுப்பினர் தோழர் நாகு ஆகியோரின் சிறிய தந்தையார் தோழர் எம். முருகன் இயற்கை எய்தியமை குறித்து கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

• • •

வளவனூர் கிளை தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் க. பழனியப்பன் அவர்களது தங்கை தோழியர் இராசவல்லி 10-9-55ல், இயற்கை யெய்தியமை குறித்து, கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

• • •

16—9—55ல், குரும்பேரி தி. மு கழகத் தோழர் மாரப்பன் அவர்களது பாட்டியார் இயற்கை எய்தியமை குறித்து கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பிரதமர் நேருவைக் கொல்ல சாதுவும், சீடர்களும் செய்த சதி!

‘இல்லை’ என்று முதன் மந்திரி மறுப்பு

லக்னோ, செப். 19—

“பண்டித நேருவைக் கொல்லுவதற்கு சதி செய்தார்கள் என்பதற்காக எவரேனும் கடந்த ஆகஸ்டு 15-ந் தேதியன்று கைது செய்யப்பட்டனரா?” என்று, உத்திர பிரதேச சட்ட சபையில் கேட்கப்பட்டது.

முதன் மந்திரி சம்பூர்ணானந்த், ‘அப்படி ஒருவரும் கைது செய்யப்படவில்லை,’ என்று கூறியிருக்கிறார்.

“ஆகஸ்டு திங்களில் வேறெந்த நாளிலேனும் அப்படிச் சிலர் கைது செய்யப்பட்டனரா?” என்று கேட்கப்பட்டபோது, முதன் மந்திரி, ‘சுமார் 10 பேர்கள், டில்லி போலீசாரால், உ. பி. போலீசாரின் உதவியுடன் கடந்த ஆகஸ்டு 10-ந் தேதியன்று கைது செய்யப்பட்டனர்,’ என்று கூறியிருக்கிறார்.

“பிரதமர் நேருவையும் இதர தலைவர்களையும் கொல்லுவதற்கான சதித் திட்டங்கள் அடங்கிய பிரசுரங்கள் ஏதேனும் பறிமுதல் செய்யப்பட்டனவா?” என்று கேட்கப்பட்டபோது, முதன் மந்திரி, ‘சில ஆட்சேபகரமான பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டன; ஆனால் அவற்றில் குறிப்பிடப்பட்ட பலாத்காரச் சதி பற்றிய விபரங்கள் எதுவும் இருக்கவில்லை; அவர்கள் புனேவில் வைத்துக் கைது செய்யப்பட்ட சாது ஒருவரின் சீடர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்கின்றனர்; அவர்கள் எந்த ஒரு அரசியல், மத இயக்கத்தையும் சேர்ந்தவர்கள் இல்லை; பிரசுரங்களை அச்சிட்ட அலுவலகத் தொழிலாளர் சிலரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்,’ என்று பதிலளித்திருக்கிறார்.

மேலும், அந்த ‘சாது’ எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பது தெரியவில்லை என்றும், வழக்கமாக அவர் ஜான்சியில்தான் வசித்து வருகிறார் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

டெல்லி போலீசார் புலன் விசாரணை செய்து வருகின்றனராம்.

சென்னையில் தடையுத்தரவு

சென்னை, செப். 21—

“சென்னை மவுண்ட்ரோடில் உள்ள சட்டசபைக் கட்டிடம், கோட்டையில் உள்ள மேல்சபைக் கட்டிடம் ஆகியவற்றைச் சுற்றிலுமுள்ள சாலைகளில், செப் 21-ந் தேதி முதல் அக். 11-ந் தேதிவரையில் சட்டசபைக் கூட்டம் நடைபெறும் காலத்தில் ஊர்வலங்களோ, ஆர்ப்பாட்டங்களோ நடத்தக்கூடாது,” என்று சென்னை நகர போலீஸ் கமிஷனர், நகர போலீஸ் சட்டம் 41-வது பிரிவின் கீழ் தடையுத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

திருச்சி மாவட்டத்தில் ‘ஜிப்சம் உப்பு’

நிபுணர்கள் தரும் தகவல்

சென்னை, செப். 20—

திருச்சி மாவட்டம் லால்குடி, பெரம்பூர் தாலுகாக்களில் 50 அடி ஆழத்தில் 1,50,00,000 டன் ஜிப்சம் உப்பு இருப்பதாக சென்னை சர்க்கார் நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர்.

வங்காளக் குடாக் கடலிலிருந்து கிடைக்கும் உப்பில் 5 சதவிகிதம் ‘ஜிப்சம்’ கலந்திருப்பதாகவும், சென்னை மாநிலத்திலுள்ள ‘பாக்டரி’களில் அதைப் பிரித்தெடுக்க முடியுமென்றும் கூறுகின்றனர்.

இரண்டாம் திட்டம்

ரூ. 600 கோடி வெளிநாட்டு உதவி தேவையாம்

புதுடில்லி, செப். 19—

கிடைத்துள்ள வெளிநாட்டு உதவித் தொகையான ரூ 260 கோடியில், சுமார் ரூ 50 கோடி வரையில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிதியில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று தெரிகிறது.

“இரண்டாம் திட்டம் முழுவதற்குமாக சுமார் ரூ 600 கோடி வெளிநாட்டு உதவி தேவைப்படலாம்,”

என்று, திட்டக்குழு நியமித்த பொருளாதார நிபுணர் குழுவினர் தெரிவித்திருக்கின்றனராம்.

20 ஆண்டுகட்குப் பின் ஒன்றுசேர்ந்த குடும்பம்

டாக்கா, செப். 20—

சலாமத்கான் என்ற பாகிஸ்தானி ஒருவர் 20 ஆண்டுகளுக்கு முன் தனது இளம் மனைவியுடன் கோபித்துக்கொண்டு, அவளுக்கு ரூ. 5,000 தந்துவிட்டு, வீட்டைவிட்டே வெளியேறிவிட்டிருக்கிறார்.

அப்போது அவரின் மனைவிக்கு 17 வயது என்றும், அவர்களுக்கு 5 மாதத்தில் ஒரு ஆண் குழந்தையும் இருந்தது என்றும் தெரிகிறது.

அண்மையில், சலாமத்கான், இரயில் வண்டி ஒன்றில் பிரயாணம் செய்கையில், தான் தனது மனைவியிடமிருந்து பிரிக்கப்பட்ட சோக வரலாற்றை உடன் பிரயாணம் செய்துகொண்டிருந்த வாலிபர் ஒருவரிடம் கூறிக்கொண்டுவந்திருக்கிறார்; அவருக்குத் தெரியாது—தன்னுடைய சொந்த மகனிடம் தான் தனது வரலாற்றைக் கூறுகிறார் என்பது!

அவர் தன்னுடைய கதையைக் கூறி முடித்ததும், தன் மகன்தான் கதையைக் கேட்டுவந்திருக்கிறான் என்பதை அறிய ஆச்சரியப்பட்டாராம்; அந்த இளைஞருடன் வந்த அம்மையார், தான் கோபித்துக் கொண்ட தன் மனைவி என்றும் அறிந்து கொண்டிருக்கிறார்.

அந்த அம்மையாரும் உடன், தனது ‘பர்தா’வை எடுத்துவிட்டு கண்களில் ஆனந்தநீர் பொங்க, தனது கணவரை வரவேற்றிருக்கிறார்.

இப்படி, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் குடும்பம் ஒன்று சேர்ந்ததாம்!

இரசாயனப் பேராசிரியர்

தற்கொலை!

கல்கத்தா, செப் 20—

இங்குள்ள செயின்ட்சேவியர் கல்லூரியின் இரசாயனப் பேராசிரியரான ஏ. கே. சென் என்பவர், இன்று, கல்லூரியில், நாற்காலி ஒன்றில் உட்கார்ந்த நிலையிலேயே மரணமடைந்ததாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

அவர் தற்கொலை செய்துகொண்டிருக்கக்கூடும் என்று, அவரிடமிருந்து பெறப்பட்ட இரண்டு கடிதங்களுள் ஒன்றில் காணப்படும் ‘என்னுடைய மரணத்திற்கு எவரும் பொறுப்பல்ல,’ என்ற வாசகங்களிலிருந்து யூகிக்கப்படுகிறதாம்.

அந்தப் பேராசிரியர் கடும்இரத்த அழுத்தத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததாயும், நீண்ட நாட்கள் விடுமுறையில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

நேற்று கல்லூரிக்கு வந்த அவர், பரிசோதனை சாலையிலிருந்த ஒரு பையனிடம், ‘பொட்டாசியம் சையனேட்’ (விஷம்) உட்பட சில இரசாயனப் பொருள்களை, ஆராய்ச்சிக்காகக் கேட்டுப் பெற்றதாகவும் கூறப்படுகிறது

சில நிமிடங்களுக்குப் பிறகு, அவர், நாற்காலியில் அசைவற்றுக் கிடப்பதை சிலர் கண்டிருக்கின்றனர்; உடன் மருத்துவர் வரவழைக்கப்பட்டிருக்கிறார்; அவர், பேராசிரியர் இறந்துவிட்டதாகத் தெரிவித்திருக்கிறார்.

பிரிவினை முழக்கம்

★

சென்னை 19-வது வட்டம்

22—9—55 மாலை 5 மணிக்கு சென்னை-தாதாஷாமக்கான், எண் 6, சேக் மோதீன் சுபேதார் சந்தில், தோழர் கதிர் டி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

★

கவுந்தப்பாடி

22—9—55 மாலை 6 மணிக்கு, அய்யம்பாளையத்தில் நடைபெறும் தோழர்கள் வேலவன், அன்பரசு ஆகியோர் பேசுவர்.

★

வளவனூர்

பழைய சினிமா திடலில்
23—9—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: க. பழனியப்பன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
கி. மனோகரன்

★

மேலப்பாளையம்

பசார் மைதானத்தில்
23—9—55 இரவு 8 மணிக்கு
பேசுவோர்:
எம். எஸ். இராமசாமி
ச. வீரபாகு
நா. சங்கரலிங்கம்

★

சிறுகளப்பூர்

சோழன் மைதானத்தில்
23—9—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: ம. தங்கையா
பேசுவோர்:
எம். எஸ். மணி
எஸ். நெடுமாறன்
அப்பா முத்துசாமி
சு. முத்துசாமி
சி. கு. பிச்சை

★

கும்மிடிபூண்டி

23—9—55 மாலை 4 மணிக்கு, கவரைப்பேட்டையில், தோழர் ஆ. கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ இராதா மணாளன், ஈ. எஸ் மணி, பெருமான், இராசமாணிக்கம், ஆ. பெ. கணேசன் ஆகியோர் பேசுவர்.

★

ஒரக்காட்டுப்பேட்டை

23—9—55 மாலை 6 மணிக்கு: கழகக் கொட்டகையில் கொடியேற்றி வைக்கப்படும். கழகத் தோழர்கள் பலர் பேசுவர்.

★

பந்தநல்லூர்

23—9—55 மாலை 5 மணிக்கு கடைத் தெருவில், தோழர் எஸ் முத்து தலைமையில் நடைபெறும் தோழர்கள் அறிவுடைநம்பி, இராம. சொக்கலிங்கம், ம. கோ. மணி, என். அசோகன் ஆகியோர் பேசுவர். இறுதியில், முத்தமிழ் நாடக மன்றத்தினர் அளிக்கும் ‘கடைசி முத்தம்’—நாடகம் நடைபெறும்.

★

சேலம்

23—9—55 அன்று மாலை, அம்மாப்பேட்டை காந்தி மைதானத்தில் நடைபெறும். தோழர்கள் கலையழகன், ஈ. ஆர். கிருஷ்ணன், கே. எஸ். அமிர்தம், எஸ். ஏ. அன்புக்கரசு ஆகியோர் பேசுவர்.

★

கு. பெரியமருதூர்

23—9—55 மாலை 6 மணிக்கு, சாவடி மைதானத்தில், தோழர் வீ. சின்னப்பன் தலைமையில் நடைபெறும் தோழர் இரா. ராமசாமி கொடியேற்றி வைப்பார். தோழர்கள் சிற்றுளி சுப்பிரமணியம், வி. எ. இராமநாதன், லோ. கருப்பையா ஆகியோர் பேசுவர்.

★

விளாப்பாக்கம் (வ. ஆ.)

23—9—55 மாலை 4 மணிக்கு நடைபெறும். தோழர்கள் நாகநாதன், ஏ குப்புசாமி ஆகியோர் பேசுவர்.

சுபாஷ் போஸ் முடிவு பற்றிய புதிய தகவல்கள்!

டோக்கியோ, செப். 20—

கடந்த 1945 ஆகஸ்டு 18-ந் தேதியன்று நிகழ்ந்த விமான விபத்தில் சிக்கிய சுபாஷ் சந்திர போஸ் இறந்துபட்டதைத் தாங்கள் நேரில் கண்டதாக, ஜப்பான் முன்னாள் இராணுவ அதிகாரிகள் மூவர் தெரிவித்திருப்பதாக, ஜப்பான் செய்தி நிறுவனமான ‘க்யோடோ’ அறிவித்திருக்கிறது.

கடந்த சமீபகாலத்தில் சுபாஷ் போசின் உடல் எரிக்கப்பட்ட சாம்பல் தங்கள் கோவிலில் பாதுகாக்கப்படுவதாகவும், அவரது பத்தாவது ஆண்டு நினைவு விழா கொண்டாடப்படுவதாகவும் சிலர் வெளியிட்ட தகவல்களை மறுத்து, அந்த செய்தி நிறுவனம், இராணுவ அதிகாரிகளின் அதிகாரபூர்வமான செய்தி பற்றித் தெரிவித்திருக்கிறது.

ஜவோ தகா குரா என்ற இராணுவ அதிகாரி, சுபாஷ் இறந்தபின் அவரது ‘சாம்பலை’யும், மற்றும் தங்கம், வைர நகைகள் ஆகியவற்றையும், டோக்கியோவில் உள்ள இந்திய சுதந்திர இயக்கத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரிடம் தானே நேரில் தந்ததாக அறிவித்திருப்பதாகச் செய்தி நிறுவனம் கூறுகிறது.

அதே இந்திய அதிகாரி தன்னைப் பலமுறை சந்தித்து, தன்னிடம் தரப்பட்ட ‘பொக்கிஷம்’ இரகசியமாகவே இருக்கவேண்டும் என்றும், அது குறித்து, தான் யாரிடமும் தகவல் தரக் கூடாதெனக் கேட்டதாகவும், தானும் அவ்வாறு தந்த தகவலை இரகசியமாக வைத்திருந்ததிற்குக் காரணம் ‘யுத்தக் குற்றம் தன்மீது சுமத்தப்படும்’ என தான் அஞ்சியதுதான் என்றும் அவர் தெரிவித்தாராம்.

‘சருக்கி இசாயாமா, தெனி யோஷி யோஷிமா என்ற இரண்டு இராணுவ அதிகாரிகளும், தைப்பேயில் உள்ள இராணுவ மருத்துவ மனையில், போஸ் இறக்கும்போது உடனிருந்தவர்கள்,’ என்று செய்தி கூறுகிறது.

விமான விபத்து பற்றி விளக்கம் தந்துவிட்டு, எரிந்துகொண்டிருந்த விமானத்திலிருந்து சுபாஷ் குதித்ததாகவும், அவர் உடம்பு எரிந்துகொண்டு இருந்ததாகவும், அந்த இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

கீழே குதித்த போஸ், மற்றும் இதரர், ஒரு ‘டிரக்’ மூலம், மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும், அங்கு அவரது தீக்காயங்களுக்கு மருந்துபோடப்பட்டது என்றும், வலி தாளாது தவித்த போஸ், ஜப்பான் மொழியில் ‘தண்ணீர், தண்ணீர்’ என்று கேட்டதாயும், பின்னர், சுமார் இரவு 11-30 மணிக்கு அவர் இறந்துபட்டதாகவும் அந்த இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனராம்.

சுபாஷ் பற்றிய இந்த ‘மர்மங்கள்’ இப்போது மீண்டும் ஜப்பானில் பரபரப்பூட்டியிருப்பதாயும், ஜப்பானில் உள்ள இந்தியர்கள் பலர், ‘சுபாஷ் பற்றிய இத்தகவல்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும்’—என்றும் கோரியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன் குடியேற்றம் வருகை

27—9—55 மாலை 6 மணிக்கு, குடியேற்றம் ஆற்றில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார். அதுபோது, மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

கலை வளர் மன்ற துவக்கவிழாவும், திரு. வி. க. நினைவு நாளும்

22—9—55 மாலை 6 மணிக்கு, சென்னை-எஸ்பிளனேட் ஒய். எம். சி. ஏ. மண்டபத்தில், திரு சி. எம். பரிபூரணம் தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் சி. பி. சிற்றரசு, டாக்டர் பி. வரதராசலு எம்.எல் ஏ., டி. எஸ். ராமானுஜம் ஜி. இலக்குமணன், ஏ. எஸ். ராகவன் ஆகியோர் பேசுவர்.

12,80,000 தொழிலாளர்கள்

அரசாங்க இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் வருவர்?

சென்னை, செப். 20—

இந்த ஆண்டு இறுதிக்குள்—தென்னாட்டில், 12,80,000 தொழிலாளர்கள் அரசாங்க இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுவராம். இந்த எண்ணிக்கை, தென்னாட்டிலுள்ள மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் மூன்றிலொரு பகுதியாம்!

சென்னை, ஆந்திரா, மைசூர், ஐதராபாத், திரு-கொச்சி, குடகு ஆகிய மாநிலங்களில் மொத்தம் நான்கு இலட்சம் தொழிலாளர்கள் உள்ளனர்; இவர்களில், 20,000 பேர் பெண்களாவர்.

ஊழியர் குடும்பங்களுக்கும் திட்டம் அமுலாகுமாம்!

அரசாங்க இன்சூரன்ஸ் திட்டத்தின் அனுகூலங்களை, ஊழியர்களின் குடும்பங்களுக்கும் பரவலாக்குவதென இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

‘கிளர்ச்சியை ஒடுக்கி விடுவதற்கு இயலாது’

வரலாற்று விளைவுகளைக் காட்டி ஆப்கன் அமைச்சர் எச்சரிக்கை

காபூல், செப். 20—

“ஆப்கன்—பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே ஏற்பட்ட எல்லைத் தகராறு தீர்ந்து விட்டால், பக்துனிஸ்தான் தகராறு தீர்ந்துவிட்டதாகக் கருத இடமில்லை; அப்துல் கபார்கான் போன்ற தலைவர்களைக் கைது செய்வதன் மூலம் இந்த கிளர்ச்சியை ஒடுக்கிவிட முடியாது; எப்போதும் போல், இத்தகராறு இன்னும் இருக்கத்தான் செய்கிறது,” என்று, ஆப்கன் அயல்நாட்டு அமைச்சர் கூறியுள்ளார்.

“பக்தூன் இயக்கத்தை ஒடுக்கும் நோக்கத்துடனேயே கபார்கானைக் கைது செய்திருப்பதாகத் தோன்றுகிறது,” என்று குறிப்பிட்டு அவர் மேலும் சொன்னார்:—

“தேசிய உணர்வுகளையும், இயக்கங்களையும் இப்படிப்பட்ட செய்கைகளால் ஒடுக்கிவிட முடியாது; இந்தியத் தலைவர்களைக் கைது செய்ததின் விளைவை, பிரிட்டிஷார் அனுபவிக்க நேரிட்டதைப் போன்றே இப்பிரச்சினையிலும் நேரிடக்கூடும்; வடஆப்பிரிக்கத் தலைவர்களைக் கைது செய்தது எப்படிப் பயனில்லாமற் போயிற்றோ, அம்மாதிரியே, பக்தூன் மக்களை ஒடுக்க முற்படுவதும் விபரீத விளைவுகளைத் தோற்றுவிக்கக்கூடும்.”

8,000 இராணுவத்தினரை பல்கேரியா குறைத்துவிடும்

கிழக்கு ஐரோப்பாவிலுள்ள கம்யூனிஸ்டு நாடுகளைப் பின்பற்றி பல்கேரியாவும், அதனுடைய இராணுவப் படைபலத்திலிருந்து டிசம்பர் 30-ந் தேதிக்குள் 8,000-பேரைக் குறைத்துவிடுமாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம் ஏ.